# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 0–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 072 /2016

ஆணை எண்: 104 /2016

நாள்: 31 /05 /2016

திருமதி. நா. விஜயகுமாரி,
க/பெ. நாகராஜன்,
76 B, ராமசாமி சந்து,
திசையன் விளை, திருநெல்வேலி மாவட்டம் — மனுதாரர்

செயல் அலுவலர்.
திசையன் விளை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். — எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், திசையன் விளை பேரூராட்சி திருமதி.நா.விஜயகுமாரி, என்பவரது 02.02.2016 நாளிட்ட, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (மனு தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015–ன் படியான முறையீடு 05.02.2016 அன்று முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 072/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீடு தொடர்பாக திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கைகள், முறையீடு தொடர்பான ஆவணங்கள், செயல் அலுவலரின் வாக்குமூலம் அனைத்தும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் கீழ்கண்டவாறு இம்முறை மன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

# ஆணை

திருநெல்வேலி மாவட்டம் திசையன் விளை பேரூராட்சி பகுதியை சேர்ந்த திருமதி.N.விஜயகுமாரி என்பாரின் 05.02.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில் கீழ்கண்டவாறு செயல் அலுவலர் மீது புகார் அளித்துள்ளார். "திசையன்விளை பேரூராட்சியில் தற்போது 2012–2013 மற்றும் 2013–2014ம் ஆண்டிற்கான தணிக்கைகள் முடிந்ததாக தெரிகிறது. எனவே நான் செய்து முடித்த பணிகளின் 2012–2013 மற்றும் 2013–2014ம் ஆண்டின் தணிக்கை முடிந்த பணிகளின் டெண்டர் அன்று செலுத்திய டேவணி தொகை மற்றும் பில்லில் பிடித்தம் செய்த டேவணி தொகைகளை பணியின் விபரப்பட்டியலுடனும் மற்றும் எந்த நிதி ஆண்டு தணிக்கைகள் என்ற விபரத்துடன் தனக்குரிய டேவணி தொகையை திரும்ப வழங்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்''.

திருமதி.N,விஜயகுமாரி, திசையன் விளை முறையீட்டு மனுவின் மீது திசையன் விளை பேரூராட்சி செயல் அலுவலரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. 15.03.2016 அன்று செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி பின்வரும் வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

> "திருமதி.N.விஜயகுமாரி, திசையன் விளை என்பவர் அளித்த முறையீடு மனுவை நான் இவ்வலுவலகத்தில் வந்து பார்த்து தெரிந்து கொண்டேன். மனுதாரர் 2012–2013 மற்றும் 2013–2014 ஆண்டில் ஒப்பந்தப் பணிகளில் பிடித்தம் செய்த வைப்புத் தொகையை திரும்ப தரவேண்டி கேட்டுள்ளார்.
>
> மனுதாரர் கூறியபடி மேற்படி ஆண்டிற்குரிய வைப்புத் தொகையை தணிக்கை அறிக்கை முடிவு பெற்று அறிக்கை தற்போது கிடைக்கப் பெற்றதினால் உடனடியாக மனுதாரருக்கு மேற்படி வைப்பு தொகையை வழங்கி உரிய அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கிறேன் என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது''.

திசையன் விளை பேரூராட்சியின் செயல் அலுவலர் வாக்குமூலத்தில் தெரிவித்ததின் படி ஒப்பந்தப்பணிகளுக்கு செலுத்திய மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட டேவணித் தொகையினை வங்கி காசோலை மூலம் மனுதாரக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தனது 17.3.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்தார்.

எனினும், பேரூராட்சி செயல் அலுவலர் அனுப்பியுள்ள காசோலையில் திசையன் விளை பேரூராட்சி "தியாகராஜா சாலை அமைத்தல் பணியில் பிடித்தம் செய்த தொகை சேர்க்கப்படாமல் விடுதல் ஆகி உள்ளது'' எனவும் மேற்கூறிய விடுதல்களை சரி செய்து தனக்கு வழங்க வேண்டிய மீதத் தொகையினை அனுப்பி வைக்கும் படி கேட்டுள்ளதன் அடிப்படையில் திசையன் விளை பேரூராட்சி செயல் அலுவலர் மீதத் தொகையினை மனுதாரருக்கு 06.04.2016 நாளிட்ட கடிதத்துடன் காசோலை மூலம் வழங்கியுள்ளார்.

இவ்வாறு மனுதாரர் முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள டேவணித் தொகை முழுவதும் மனுதாரருக்கு கிடைக்கப் பெற்றதா என்பதை உறுதி செய்ய இம்முறை மன்ற நடுவம் 22.02.2016 கடிதத்தில் "சரிசெய்யப்பட்டதா'' என்பது குறித்து இம் முறை மன்ற நடுவத்திற்கு தெரிவிக்க கோரப்பட்டது.

மனுதாரர் தனது 05.05.2016 நாளிட்ட கடிதத்தில் இம்முறை மன்ற நடுவத்திற்கு தனது பதிலை சமர்ப்பித்துள்ளார்.

> "நான் திசையன் விளை பேரூராட்சியில் வசித்து வருகிறேன். திருநெல்வேலி மாவட்டம், திசையன் விளை பேரூராட்சியில் நான் செய்து முடித்த பணிகளில் பிடித்தம் செய்த 2012–2013 மற்றும் 2013–2014 வருடத்திற்கான தணிக்கை முடிந்த பின்னரும் எனக்கு திரும்ப வழங்க வேண்டிய தொகை வழங்காமல் காலம் கடத்தி வந்த நிலையில் தங்களிடம் மனு செய்து, தாங்கள் விசாரணை மேற்கொண்டதன் பலனாக திசையன் விளை பேரூராட்சி மூலம் 17.03.2016–ல் ரூ.4,23,036/–க்கான காசோலை கிடைக்க பெற்றது. அதில் சில விடுதல்கள் இருந்தது. அதையும் சம்பந்தப்பட்ட திசையன்விளை செயல் அலுவலருக்கும், தங்களுக்கும் தெரியபடுத்திய பின்னர் விடுதலுக்கான தொகை ரூ.35,210க்கான காசோலை 30.03.2016–ல் கிடைக்கப் பெற்றது. இதனால் 2012–2013 மற்றும் 2013–2014–ம் ஆண்டிற்கான தணிக்கை முடிந்த தொகை மற்றும் விடுதல் தொகை உள்பட,

அ.வ.எண்.072/பேரூராட்சி/2016ன் படி சமர்ப்பிக்கப்பட்ட முறையீடு சரிசெய்யப்பட்டுள்ளது எனற விபரத்தை தங்களுக்கு தெரியபடுத்தி கொள்வதுடன் தங்களின் விசாரணை மூலம் எனக்கு வழங்க வேண்டிய தொகையை பெற்று தந்தமைக்கு கோடான கோடி நன்றி ஐயா'' எனத் தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய சூழ்நிலையில் இம்முறை மன்றத்தில் பெறப்பட்ட முறையீடு மனு எண்072/2016ல் தெரிவிக்கப்பட்ட புகார் சரிசெய்யப்பட்டதாகவும் முறையீட்டு மனுதாரர் தனக்கு கிடைக்க வேண்டிய டேவணித் தொகை முழுவதும் பெற்றுக் கொண்டு இம்முறைமன்றத்திற்கு மேற்கூறிய வகையில் நன்றி தெரிவித்துள்ளார். எனவே முறையீடு மனு 072/2016 முடிக்கப்பட்டதாக கருதி ஆணையிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு மே திங்கள் 30 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(கையொப்பம்) மு. பழனிவேல்
செயலாளருக்காக

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை–600 032

பெறுநர்

செயல் அலுவலர்,
திசையன் விளை பேரூராட்சி.
திருநெல்வேலி மாவட்டம்–627 657